# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*


வழக்கு எண்.**13855**/விசாரணை/2009

<u>விசாரணை நடைபெற்ற நாள் 22.09.2009.</u>

| | |
|---|---|
| முன்னிலை: | முனைவர் (திருமதி) சாரதா நம்பி ஆரூரன்,<br>எம்.ஏ.,எம்.ஃபில்,,பி.எச்,டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர்: | திரு K.முத்தமிழ்ச்செல்வன்,<br>2/35, படையாச்சி தெரு,<br>வல்லம்,<br>தஞ்சாவூர் மாவட்டம் – 613 403. |
| பொது அதிகார அமைப்பு: | பொதுத் தகவல் அலுவலர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>கந்தர்வக்கோட்டை வட்டம்,<br>புதுக்கோட்டை மாவட்டம். |

*****

மனுதாரர் திரு K.முத்தமிழ்ச்செல்வன் ம.ற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு S.R.சுப்பையா, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கந்தர்வக்கோட்டை வட்டம், புதுக்கோட்டை மாவட்டம் இன்று (22.09.2009) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 23.04.2009 அன்று பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், கந்தர்வக்கோட்டை வட்டம், புதுக்கோட்டை மாவட்டம் அவர்களிடம் 4 இனங்களில் தகவல்களைக் கேட்டு மனுச் செய்துள்ளார். 28.04.2009 அன்று மனுதாரருக்குப் பதில் அளிக்கப்பட்டுள்ளது. தான் கேட்ட கேள்விகளுக்குத் தொடர்பில்லாத தகவல்கள் அளிக்கப்பட்டதாலும், கேட்ட ஆவணங்கள் தங்களிடம் இல்லையென்று தகவல்

தெரிவிக்கப்பட்டுள்ளதாலும் 27.05.2009 அன்று துறைக்கு மேல் முறையீடும் 19.06.2009 அன்று ஆணையத்திற்கு மேல் முறையீடும் செய்ததன் அடிப்படையில் வழக்கு இன்று (22.09.2009) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுதாரர் கேட்ட தகவல்கள் நிரந்தரமாகப் பாதுகாக்கப்பட வேண்டிய கோப்புகள் என்றும், முடிவுற்ற கோப்புகளின் அட்டவணை நிரந்தரமாக வைக்கப்பட வேண்டியவை என்றும் மனுதாரர் விசாரணையில் கூறினார். செட்டில்மென்ட் கணக்கு நகல்கள் வழங்கப்படுவதோ, விவரங்களைத் தெரிவிக்கவோ வட்டாட்சியருக்கு அதிகாரம் இல்லையென்று மனுதாரருக்கு அளிக்கப்பட்டுள்ள பதிலை ஆணையம் ஏற்கவில்லை. இந்நிலையில் கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

மனுதாரர் கேட்டுள்ள தகவல்களை இவ்வாணை பெற்ற 15 நாட்களுக்குள் அளித்து, ஒப்புகை பெற்று விவரத்தை ஆணையத்திற்குத் தெரிவிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 23.09.2009** **தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**(சு.மோகன தாஸ்)**
**உதவி பதிவாளர்**

பெறுநர்

<u>வழக்கு எண்.13855/விசாரணை/2009</u>
பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கந்தர்வக்கோட்டை வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

திரு K.முத்தமிழ்ச்செல்வன்,
2/35, படையாச்சி தெரு,
வல்லம்,
தஞ்சாவூர் மாவட்டம் – 613 403.

*"ptl"*